முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

வா.சா. 1 தேதி.20.06.2024

| OS.No. | 163/2021 | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது தரப்பு ஆவணங்களாக 05.08.2004 தேதியில் எனக்கும் அறக்கட்டளைக்கும் ஏற்பட்ட மனைபகுதி ஒப்பந்த சீட்டு அசல் வா.சா.ஆ.1, அறக்கட்டளை வழங்கிய தடையில்லா சான்றிதழ் வா.சா.ஆ.2, 05.08.2004 (இரண்டு ரசீதுகள்), 14.10.2019 (நான்கு ரசீதுகள்) 05.03.2020, 07.04.2021 ஆகிய தேதிகளில் அறக்கட்டளை வழங்கிய குத்தகை ரசீதுகள் வா.சா.ஆ. 3 முதல் 6(அவற்றில் வாதியே பவர் ஏஜெண்டாக இருந்து கையொப்பம் செய்துள்ளதால் வா.சா.ஆ.1 முதல் 3, 6 பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபித்து அவர்களின் ஆட்சேபனைக்கு உட்பட்டு) குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.